

# விசுவாசக் குடும்பங்கள்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *அப்போஸ்தலர் 10:1-28,34,35; 1கொரிந்தியர் 2:2; 1தெசலோனிக்கேயர் 5:21,22; யோவான் 1:12,13; 3:7; 1யோவான் 5:1.*

**மனன வசனம்:** ஆகையால்,விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். எபிரெயர் 12:1,2.

வாழ்க்கையில் சந்திக்கிற அல்லது சந்திக்கப்போகிற காலக் கட்டம் எதுவாகவும் இருக்கட்டும்; நம் வாழ்வின் பின்னணியில்கலாச் சாரத் தாக்கம் இருக்கும். பெற்றோர், பிள்ளைகள், குடும்பத்தார், சபையார் அனைவருமே நாம் வாழ்கிற கலாச்சாரத்தின் தாக்கத்திற்கு ஆளானவர்கள்தாம். இக்காலக் கலாச்சாரம் எவ்வளவு அதிகமாக, எதிர்மறைத் தாக்கத்தை சபையில் ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு ஓய்வு நாள் சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டது சிறந்த உதாரணம். கலாச்சாரம் எவ்வளவு ஆற்றல்மிக்கது என்பதற்கு ஞாயிறு ஆசரிப்புச் சபைகள்தாம் சாட்சி.

கிறிஸ்தவக் குடும்பத்தினர் எல்லாக் காலத்திலும் கலாச்சாரச் சவால்களைச் சந்திக்கிறார்கள். கலாச்சாரத் தாக்கங்கள் சில சமயங்களில் நன்மையாகவும், பெரும்பாலும் எதிர்மறையாகவும் இருக்கின்றன.

கலாச்சாரச் சவால்களை எதிர்கொள்வதற்கான வெளிச்சத்தையும், ஆறுதலையும், பெலனையும் சுவிசேஷம் கொடுக்கிறது. நாம் ‘கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்றபிள்ளைகளுமாக’ இருக்கவேண்டும்; ‘விசுவாசக் குடும்பங்களாக’ வாழும்விதம்பற்றிப் படிப்போம்.

*2019, ஜூன் 15 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# "நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்"

உலகம் முழுவதிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வருகிறது. எனவே, குடும்ப உறவுகள் மற்றும் சமுதாய உறவுகள் சம்பந்தப்பட்ட கலாச்சாரங்களையும் பழக்கவழக்கங்களையும் கிறிஸ்தவர்கள் எதிர் கொள்கிறார்கள். குடும்ப உறவுகள் உட்பட, பல்வேறு விஷயங்களில் கலாச்சார நடைமுறைகள் மாறுவதால், அவற்றிற்கு ஒத்துப்போவது கிறிஸ்தவ நற்செய்தியாளர்களுக்கு பெரிய சவாலாக இருக்கிறது.

**கேள்வி: பிறருடைய கலாச்சாரங்களைப் பார்க்கும்போது, நம்முடைய சொந்த அபிப்பி ராயங்களையும் கட்டுப்பாடுகளையும் மனதில் வைத்துப் பார்க்கக்கூடாது. அதுபற்றி அப் 10:1-28,34,35 வசனங்களிலிருந்து என்ன அறியலாம்?**

ஒவ்வொரு மனிதனுடைய பாவத்திற்காகவும் கிறிஸ்து மரித்தார். இந்த மாபெரும் சத்தியத்தை அறியாத பலர் இருக்கிறார்கள். இந்தச் செய்தியைச் சொல்லி, மனந்திரும்புமாறு அழைப்பதுதான் கிறிஸ்தவர் களின் ஊழியப்பணி. தேவனிடம் பட்சபாதமே கிடையாது. எனவே கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரையும் மரியாதையாக, நேர்மையாக நடத்த வேண்டும்; நற்செய்தியை ஏற்றுக்கொள்ள ஒருவாய்ப்பளிக்கவேண்டும்.

**கேள்வி: பிற கலாச்சாரத்தினருக்குச் சுவிசேஷம் அறிவிப்பதுகுறித்து என்ன தீர்மானங் களுக்கு ஆரம்பகால கிறிஸ்தவ ஊழியப்பணியாளர்கள் வந்தார்கள்? அதில் நமக் குள்ள செய்தி என்ன? அப் 15:19,20,28,29; 1கொரி2:2; 1தெச 5:21,22.**

ஒவ்வொரு கலாச்சாரமும் மனிதனின் விழுந்துபோன நிலையைப் பிரதிபலிக்கிறது; வேதாகமத்திற்கு ஒத்துப்போகிற, சுவிசேஷத்திற்கு உறுதுணையாயிருக்கிற நம்பிக்கைகளும் அக்கலாச்சாரங்களில் காணப் படலாம். உதாரணமாக, குடும்பத்திலும் சமுதாயத்திலும் நெருக்கமான உறவுகள் காணப்பட வேண்டுமென்று வலியுறுத் துகிற கலாச்சாரங்கள் உள்ளன. நன்மையான, வேதாகம நியதிகளுக்கு ஒத்துப்போகிற நியதி கள் கலாச்சாரத்தில் காணப்பட்டால் அவற்றை கிறிஸ்தவர்கள் பின்பற்ற லாம்; அவற்றில் உறுதியாக இருக்கலாம்.

அதேசமயம், தேவனுடைய சத்தியத்தை விலைபேசக்கூடாது. சமரசமாவதும், கலாச்சாரங்களுக்கு ஒத்துப்போவதும் மெய்யான கிறிஸ்தவ மார்க்கம்போன்றே தோன்றும் பொய்யான கிறிஸ்தவ மார்க் கத்தைத் தோன்றச்செய்த சம்பவங்கள் வரலாற்றில் உண்டு. சாத்தான் தன்னை இந்த உலகத்தின் தேவனென்று சொல்கிறான், குழப்பத்தைப் பரப்புகிறான். ஆனால் இயேசு இந்த உலகத்தை மீட்டிருக்கிறார்; அவ ருடைய பின்னடியார்களை சகல சத்தியத்திற்குள்ளும் அவருடைய ஆவியானவர் நடத்துகிறார். யோவான் 16:13.

உங்கள் விசுவாசத்தில் எவ்வளவு தூரம் கலாச்சார தாக்கம் உள்ளது? எவ்வளவு தூரம் வேதாகம சத்தியத்தின் தாக்கம் உள்ளது? இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தை எவ்வாறு பகுத்தறியலாம்? பதிலை வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.

# குடும்பத்தைக் கலாச்சாரம் தாக்குகிற வேகம்

'கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன்தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக் கிறேன்.' ஆதியாகமம் 18:19.

குடும்பங்கள்தாம் சமுதாயத்தின் கட்டுமானக் கூறுகள். ஆனால் மனிதர்கள் பல்வேறு பிரிவினர்களாக வாழ்கிறார்கள். அதனால்தான் அந்தந்த சமுதாயங்களுக்குரிய கலாச்சாரப் பண்புகள் குடும்ங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக, ஒரு பழங்கால கலாச்சாரம் என்னவென்றால், மரித்த பெற்றோரின் சடலங்களை மகன் சாப்பிடவேண்டும்; வேறு ஒரு கலாச்சாரத்தில், பெண்ணுக்கு வரதட்சனையாக எதிரி பழங்குடி இனத்தவரின் தலைகளைக் கொண்டுவரவேண்டும். இன்றைய காலங்களிலும்கூட பிள்ளைகளையும், திருமணத்திற்குமுன் இருவர் பழகுவதையும், விவகாரத்தையும், திருமணத்தையும், பெற்றோரையும், இன்னும் பல விஷயங்களையும் பார்க்கிற விதம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. பல்வேறு கலாச்சாரத்தினருக்கும் நாம் நற்செய்தியை அறிவித்தாகவேண்டும். எனவே, நம்முடைய நம்பிக்கைகளை விட்டுக்கொடுக்காமல், தேவையற்ற பிரச்சனைகளை உருவாக்காத விதத்தில் சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும். அதேசமயம், நம்மில் கலாச்சாரம் எற்படுத்துகிற தாக்கங்களையும் அறிந்திருக்கவேண்டும்.

**கேள்வி: பின்வரும் உதாரணங்களில் குடும்ப வாழ்க்கையில் கலாச்சாரம் ஏற்படுத்திய தாக்கம் என்ன? இந்த உதாரணங்களில் நமக்குள்ள நியதிகள் என்ன?**

**ஆதி 16:1-3** ____________________

**ஆதி 35:1-4** ____________________

**எஸ்றா 10** ____________________

**1இராஜா 11:1** ____________________

கலாச்சார தாக்கத்திற்கு ஆளாகாத நபர்களும் இல்லை, குடும்பங்களும் இல்லை. கிறிஸ்தவர்கள் தங்கள் கலாச்சாரத்திற்குட்பட்டு வாழ்ந்து, விசுவாசத்திற்கு ஒத்துப்போகிறவற்றைக் கைக்கொள்ளவேண்டும், ஒத்துப்போகாதவற்றைத் தவிர்க்கவேண்டும்.

உங்கள் கலாச்சாரத்தில் என்னென்ன விஷயங்கள் குடும்ப வாழ்க்கைக்கு உதவுகிறவையாக, வேதாகமத்திற்கு ஒத்துப்போகிறவையாக இருக்கின்றன? எவை அவ்வாறு இல்லை? மாற்ற முடியாத சத்தியங்களை விட்டுக்கொடுக்காமல், உங்கள் கலாச்சாரத்தோடு உங்கள் விசுவாசமும் இணைந்து செல்லும்படி எவ்வாறு வாழலாம்?

____________________

# ஏற்றத்தாழ்வுகளுக்கு மத்தியிலும் குடும்பத்தைக் கட்டிக்காத்தல்

எந்தக் கலாச்சாரத்தில் வாழ்கிற குடும்பத்தினராலும்கூட, மாற்றம் என்கிற உண்மையிலிருந்து தப்பிக்க முடியாது; அதற்கு தீர்வு காணவும் முடியாது. வாழ்க்கை சுழற்சியின் மாற்றங்களைக் கணித்துவிடலாம். ஆனால் மரணம், பேரழிவு, போர், நோய், குடிபெயர்வு அல்லது வேலை இழப்பு போன்ற விஷயங்களில் மாற்றத்தைக் கணிக்கமுடியாது. ஒவ்வொரு சமுதாயத்திலும் தேசத்திலும் பொருளாதார மற்றும் சமுதாய மாற்றங்களுக்கு பல குடும்பங்கள் ஆளாகின்றன. வேறு சில மாற்றங்களுக்கு கலாச்சாரம்தான் முழு காரணமாக இருக்கும்.

**கேள்வி: மிகப்பெரிய, வேதனையான மாற்றங்களைச் சந்தித்த சில நபர்களை கீழுள்ள உதாரணங்களில் காணலாம். அவர்களுடைய இடத்தில் நீங்கள் இருந்திருந்தால், அந்த மாற்றத்தை எதிர்கொள்ள என்ன அணுகுமுறையைக் கையாண்டிருப்பீர்கள்?**

**ஆபிரகாம், சாராள், லோத்து (ஆதி 12:1-5)** ____________________

____________________

____________________

**அத்சாள் (எஸ்தர் 2:7-9)** ____________________

____________________

____________________

**தானியேல், அனனியா, மிஷாவேல், அசரியா (தானி 1)** ____________________

____________________

____________________

மாற்றம் வரும்போது தோல்வியுணர்வு உண்டாகும்; எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற உணர்வு ஏற்படும். இந்த மாற்றங்கள் மக்களை புதிய வளர்ச்சி நிலைகளுக்கும் ஆவிக்குரியவற்றைப் புரிந்து போற்றுவதற்கும் வழிநடத்தலாம் அல்லது மனஅழுத்தத்திலும் பதற்றத்திலும் ஆழ்த்தலாம். மாற்றங்களுக்கு ஒத்துப்போக அந்தக் குடும்பத்திற்கு உள்ள திறனைப் பொருத்துதான் இது உள்ளது. மாற்றங்கள் ஏற்படுத்துகிற சஞ்சலங்களை சாத்தான் சாதகமாக்கி, தேவன்மேல் சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் உண்டாக்க நினைக்கிறான். விசுவாச வீரர்களும், வீராங்கனைகளும் வாழ்வின் மாற்றங்களை வெற்றிகரமாக எதிர்கொண்டதற்கு தேவ வார்த்தையின் வாக்குறுதிகளும், குடும்பம் மற்றும் நண்பர்களின் ஆதரவும், தங்களுடைய வாழ்க்கை தேவனுடைய கரத்தில் இருக்கிறது என்கிற நிச்சயமும்தான் உதவியிருக்கின்றன.

யாராவது ஒருவர் அல்லது ஒரு குடும்பத்தினர் வேதனைமிக்க சூழலில் இருப்பார்களானால், அவர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்க ஏதாவது செய்யலாமே?

# முதல்-தலைமுறை விசுவாசத்திற்குத் திரும்புதல்

**கேள்வி: யோசுவாவும் அவரோடு சேர்ந்தவர்களும் மரித்தபிறகு, விசுவாசம் எத்தகைய நெருக்கடிக்கு உள்ளானது? நியா 2:7-13.**

---

சபைபோன்ற அமைப்புகளின் விழுமியங்களும் நம்பிக்கைகளும் பின் தலைமுறையினருக்குச் செல்வது குறித்து ஆராய்ச்சிகள் செய்யப் பட்டன. அந்த அமைப்புகளை நிறுவியவர்கள் அதன் நம்பிக்கைகள் மேல் அதிகப்பட்ச அர்ப்பணிப்புடன் இருந்ததாகக் கண்டுபிடித்தார்கள். ஒரு தலைமுறை அல்லது இரண்டு தலைமுறை ஆவதற்குள் அந்த விழு மியங்களின் நியதிகளை பெரும்பாலானோர் மறந்துவிடுகிறார்கள். பழக்கவழக்கத்தால் அந்த அமைப்புகளுடன் ஒட்டியிருப்பார்கள். காலஞ் செல்லசெல்ல, அந்தப் பழக்கவழக்கங்களே பின்னர் பாரம் பரிய நம்பிக்கைகளாக மாறிவிடும். அதன்பிறகு துவக்க நிறுவனர் களிடம் காணப்பட்ட அர்ப்பணிப்பு இல்லாமலே போகும்.

**கேள்வி: தேவனுக்கு பிள்ளைகள்தாம் உண்டு, பேரப்பிள்ளைகள் இல்லை என்று சொல் லப்படுவதுண்டு. இதன் அர்த்தம் என்ன? யோவான் 1:12,13; 3:7; 1யோவான் 5:1.**

---

கிறிஸ்தவத்தைப் பொருத்தவரையில், முதியவர்கள் இளையவர் களுக்குச் சொல்லித்தான், விழுமியங்கள் வளர்கின்றன. எனவே பெற் றோரின் நம்பிக்கையோ சபையின் நம்பிக்கையோ ஒருவருடைய தனிப்பட்ட நம்பிக்கையாகிவிடாது. வரலாறும் கோட்பாடும் உடைய ஒரு சபையில் அங்கத்தினராக இருப்பதால் மட்டும் கிறிஸ்தவராக மாறி விட முடியாது. மெய்யான விசுவாசம் மரபுரிமையால் கிடைப்பதில்லை; இயற்கையாகவே அது ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலை முறைக்குத் தாவுவதும் இல்லை. ஒவ்வொருவரும் தனித்தனியே கிறிஸ்துவை அறிந்துகொள்ள வேண்டும். அதற்குத்தான் பெற்றோர் உதவவேண்டும். அதுதான் சரியானது; அந்தத் தீர்மானித்திற்கு வாலிபர்கள் வரும்படி சபையும், குறிப்பாக பெற்றோரும் தங்களால் இயன்றதை எல்லாம் செய்யவேண்டும். முடிவில், ஒரு தலைமுறை இரட்சிக்கப்படுகிறதா அல்லது இரட்சிப்பை இழக்கிறதா என்பது ஒவ் வொரு நபரையும் வைத்துதான் உள்ளது.

ஜோ ஒரு நாத்திகர். ஒரு வல்லமையான மனமாற்ற அனுபவத்தைச் சந்தித்து, செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையில் சேர்ந்தார். ஒரு அட்வென்டிஸ்ட் பெண்ணைத் திருமணம் செய்தார்; குழந்தைகள் பிறந்தார்கள்; அந்தத் தம்பதியர் பிள்ளைகளை விசுவாசத்தில் வளர்த்தார்கள். பிறகு ஒருநாள் தன்னுடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய நிலையை எண்ணிப்பார்த்த ஜோ, "எனக்கு ஏற்பட்டதுபோன்ற அனுபவம் என் பிள்ளைகளுக்கும் ஏற்படிருந்தால் நன்றாக இருக்குமே!" என்று சொன்னார். அவருக்கு உங்களுடைய பதில் என்ன?

---

# இருபத்தோராம் நூற்றாண்டு அறிவிப்பாளர்கள்

வேதாகமத்தை மொழிபெயர்ப்பு செய்திருக்கும் யூஜின் பீட்டர்ஸன், அதற்கு தூது என்று பெயரிட்டிருக்கிறார். வேதாகமத்தில் 'சுவிசேஷம்' என்று வருகிற இடங்களிலெல்லாம் 'தூது' என்று போட்டிருக்கிறார். இயேசுவைப் பற்றிய நற்செய்திதான் இன்று உலகத்திற்கு தேவைப்படுகிற தூது. அதை ருசிபார்க்கவும், கலாச்சாரம் தாண்டி அதைப் பகிரவும் ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்தினரும் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

**கேள்வி: பின்வரும் வசனங்கள் சொல்லும் 'தூது' என்ன? மத் 28:5-7; யோவான் 3:16; ரோமர் 1:16,17; 1கொரி 2:2; 2கொரி 5:18-21.**

சீடர்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலைத்தான் அங்குமிங்கும் ஓடி அறிவித்தார்கள். அவர் சொன்னதுபோலவே 'மரித்தோரிலிருந்து எழுந்தார்' என்பது காலம்காலமாக அறிவிக்கப்பட்டு வருகிறது; கிறிஸ்தவக் குடும்பங்களும் அதை அறிவிக்கவேண்டும். மத் 28:7. இயேசு தம்மைப் பற்றியும், தேவனைப் பற்றியும், பாவிகளை நேசிப்பது பற்றியும், பாவமன்னிப்பு பற்றியும், தம்மை விசுவாசிப்பதால் கிடைக்கும் நித்திய ஜீவன் பற்றியும் இயேசு சொன்ன எல்லாமே உண்மைதான் என்பதை அவருடைய உயிர்த்தெழுதல் காட்டிவிட்டது.

**சுவிசேஷத்தின் மீதான தீவிர பற்று.** இயேசுவின் ஆரம்பகால சீடர்களின் வாழ்க்கையில் சுவிசேஷம் ஏற்படுத்திய தாக்கம் அளவிட முடியாதது. வேத ஆராய்ச்சிக்காக வீடுகளைத் திறந்துவைத்தார்கள்; சேர்ந்து உண்டார்கள்; ஜெபித்தார்கள்; பணத்தையும் வளங்களையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்தார்கள்; ஒருவர்மேல் ஒருவர் அக்கறை காட்டினார்கள். குடும்பமாக தூதை ஏற்றுக்கொண்டார்கள். உடனே அவர்கள் குறையில்லாதவர்களாக மாறிவிடவில்லை. அவர்களுக்கும் சில சச்சரவுகளும், பிரிவினையும் காணப்பட்டன. ஆனாலும் கிறிஸ்துவைப் பின்பற்றினதால் வித்தியாசமானவர்களாக இருந்தார்கள். தேவனும் சகமனிதர்களும் தங்கள் வாழ்க்கையில் அவசியமென ஒத்துக்கொண்டார்கள். வீட்டிலும் சபையிலும் ஐக்கியமும் இணக்கமும் அவசியமென வலியுறுத்தினார்கள். அதன்மூலம், கெத்செமெனேயில் இயேசு ஏறெடுத்த ஜெபத்தை நிறைவேற்ற பிரயாசப்பட்டார்கள். யோவான் 17:20-23. தங்களுடைய நம்பிக்கைகளுக்காக உயிரையும் பணயம்வைத்து, தங்களுக்குள்ளும் அவிசுவாசிகளுக்குள்ளும் சாட்சிபகர்ந்தார்கள்.

நாமும் அப்படியே செய்யவேண்டும். தேவபக்திக்குரியவற்றை வெறுக்கிற இந்தக் காலத்திலும்கூட, ஆர்வமிருந்தால் மக்கள் செவிகொடுக்கிறார்கள். சுவிசேஷத்தை அறிகிற ஆர்வத்தால் மக்கள் இருதயங்களை நிரப்ப ஆவியானவர் ஏங்குகிறார். வார்த்தை சொல்வதுபோல சுவிசேஷத்தின் நன்மையானதென்று இருதயங்களில் உணரும்போது, எந்த தயக்கமுமின்றி, நாமாக அதைப் பகிர்ந்துகொள்வோம்.

'தூதை' கட்டியங்கூறி அறிவிக்கிற களமாக உங்கள் குடும்பம் மாறுவதற்கு என்ன மாற்றங்களை நீங்கள் செய்யலாம்?

## மேலும் படிக்க:

**தேவன் பட்சபாதமுள்ளவரல்ல.** "கிறிஸ்துவை நம்பி, அவரை ஏற்றுக் கொள்ளும்போது, மேன்மையான எண்ணத்தையும் செயலையும் அந்த நம்பிக்கை ஒருவரில் உருவாக்குகிறது. அதேசமயம், மனிதர்கள் எல்லாருமே தேவ குமாரனின் தியாகபலியால் வாங்கப்பட்டிருப்பதால், அவர்கள் எல்லாருமே தேவ அன்புக்கு ஆளானவர்களென அந்த நம்பிக்கை சுட்டிக் காட்டுகிறது. இயேசுவின் பாதத்தண்டையில் பணக்காரனும் ஏழையும், கற்றவனும் கல்லாதவனும் சமமாகிறார்கள்; இனப் பாகுபாட்டிற்கோ உலக அந்தஸ்திற்கோ அங்கு இடமில்லை. நம்முடைய பாவங்களால் குத்துப்பட்டவரை நாம் நோக்கிப் பார்க்கும்போது, பூலோக பாகுபாடுகள் அனைத்துமே மறைந்துபோகின்றன. பரலோகத்தில் உயர்த்தப்பட்டவரின் சுயதியாகமும், அருளிரக்கமும், எல்லையில்லா மனதுருக்கமும் மனிதர்களின் பெருமையையும், சுயமதிப்பையும் சமுதாயப் பாகுபாட்டையும் அவமாக்குகின்றன. தூய்மையான, மாசற்ற நம்பிக்கையில் பரலோகத்திலிருந்து பிறந்த நியதிகள் வெளிப்படும்; சத்தியத்தின் மூலம் பரிசுத்தமாக்கப்பட்ட அனைவரையும் அந்த நம்பிக்கை ஐக்கியப்படுத்தும். எல்லாருமே இரத்தத்தால் விலைக்கு வாங்கப்பட்டவர்கள்தாம்; தேவனுக்கென்று அவர்களை மீட்டவரை அவர்கள் சார்ந்திருக்கிறார்கள்."

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *ஞாயிற்றுக்கிழமைக்கான கேள்வியை வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.*
2. *நம்முடைய குடும்ப வாழ்க்கையில் எழுப்புதலை உண்டாக்க வல்ல என்ன நியதிகள் மேலுள்ள எலன் ஒய்டின் மேற்கோளில் காணப்படுகின்றன?*
3. *சபையிலுள்ள வாலிபர்களை விசுவாசத்தில் வளர்ப்பதில் உங்களுடைய சபை எவ்வளவுக்கு முயற்சி எடுத்துள்ளது? இந்த முக்கியப் பணியில் உங்களுடைய சபைக்கு நீங்கள் எவ்வாறு உதவமுடியும்?*
4. *அடுத்த தலைமுறையினருக்கு விசுவாசத்தைக் கடத்தப் பிரயாசப்படுவதிலுள்ள சவால்கள் என்ன?*
5. *நீங்கள் வாழ்கிற கலாச்சாரமானது உங்களுடைய குடும்ப வாழ்க்கையில் உண்டாக்குகிற நன்மையான தாக்கம் என்ன? தீமையான தாக்கம் என்ன?*

# தேவனுக்காக முழு ஆற்றலுடன்

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ, அட்வென்டிஸ்ட் மிஷன்**

டெல்ஸி நைஸ்லியின் கடைக்கு வந்த ஒரு முதியவர், "இந்த ஓய்வுநாளில் நீங்கள் ஆலயத்திற்கு வருகிறீர்கள்" என்று சொன்னார்.

நைஸ்லிக்கு விருப்பமில்லை. அட்வென்டிஸ்ட் சபைக்குச் சென்றவர்தாம், அட்வென்டிஸ்ட் பள்ளியில் படித்தவர்தாம். ஆனால் பெரியவளானபிறகு சபைக்குச் செல்வதை நிறுத்தினார்; திருமணம் செய்தார்; கடை ஒன்றை ஆரம்பித்தார்.

ஆனால் அந்த முதியவரை சிறுவயது முதற்கொண்டு தெரியும் என்பதால், தட்டிக்கழிக்க முடியவில்லை. கெஸ்டர் எர்ஸ்கின் என்ற அந்த முதியவர், ஒவ்வொரு ஓய்வுநாளிலும் அவளுடைய பெற்றோரின் பண்ணைக்குச் சென்று, அவளுடைய 11 சகோதர சகோதரிகளையும் தன் காரில் ஏற்றிக்கொண்டு ஆலயத்திற்குச் செல்வது வழக்கம்.

நைஸ்லியின் பதிலை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தார்.

"என்னிடம் நல்ல ஆடைகள் இல்லை" என்று சொல்லி, தப்பித்தார்.

எனவே அடுத்தவாரமும் எர்ஸ்கின் வந்தார். "உடல் நலமாக இருந்தால் வருகிறேன்" என்று சொன்னாள். அந்த வாரம் வெள்ளிக்கிழமையில் அவளுக்கு இரத்த உறைவு ஏற்பட்டு, இரண்டு வாரம் மருத்துவமனையில் கிடந்தாள். பயந்துபோனாள். இனி உடல்நலச் சம்பந்தப்பட்ட காரணத்தைச் சொல்லக்கூடாதெனத் தீர்மானித்தாள்.

இரண்டு வாரங்கள் கழித்து, தேசிய ஞாயிறு சட்டம் என்கிற புத்தகத்தை அவளிடம் கொடுத்தார் எர்ஸ்கின். ஓய்வுநாள் எவ்வாறு ஞாயிற்றுகிழமைக்கு மாற்றப்பட்டது என்பதைச் சொல்கிற புத்தகம் அது. அட்வென்டிஸ்ட் போதகரான ஏ. ஜன் மார்கஸன் எழுதிய அந்தப் புத்தகத்தை மூன்றுமுறை வாசித்தாள். 'அட்வென்டிஸ்ட் பள்ளியில் படித்திருக்கிறேன், இவை எல்லாமே எனக்கு தெரிந்ததுதான். அப்படியிருந்தும் நான் ஏன் ஆலயத்திற்குச் செல்லவில்லை?' என்கிற கேள்வி எழுந்தது.

"எனவே அன்றுமுதல் ஆலயத்திற்குச் செல்ல ஆரம்பித்தேன், அதன்பிறகு நான் செல்லாமல் இருந்ததே இல்லை" என்று சொல்கிறார் நைஸ்லி.

நைஸ்லிக்கு இன்று 63 வயது. தேவனுக்காக முழு ஆற்றலுடன் செயல்படுகிறார். பல சுவிசேஷத் தொடர்க்கூட்டங்களை நடத்தியிருக்கிறார்; தன் செல்வாக்கு மூலம் அநேகரை இயேசுவிடம் வழிநடத்தியிருக்கிறார்.



ஆடை இல்லையென்று சொல்ல, இன்று போதுமென்று சொல்லுமளவிற்கு தேவன் ஆடைகளைக் கொடுத்திருக்கிறார்.

**"ஆடை விஷயத்தில் எனக்கு எந்தக் குறையும் இல்லாமல் தேவன் பார்த்துக்கொண்டார்" என்கிறார்.**